மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருவண்ணாமலை டி.என். 25ஜி–0121 என்ற பதிவு எண் கொண்ட பழைய அம்பாசிடர் சீருந்தினைக் கழிவு நீக்கம் செய்து புதிய அம்பாசிடர் சீருந்து வாங்குவதற்கு அனுமதி வழங்குதல்.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி.2) துறை.

அரசாணை (டி) எண். 25 நாள் 10. 01. 2008

படிக்கப்பட்டவை:

1. இந்திய அரசு ஊரக வளர்ச்சி அமைச்சகக் கடித எண். ஆர்– 20015/32/2004–மாஊவமு, நாள் 03.01.2005.
2. மாவட்ட ஆட்சித் தலைவர்/தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருவண்ணாமலை மாவட்ட கடிதம் எண். பி7/9609/07, நாள் 13.11.07
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித எண். 90158/2007/ எஸ்.ஜி.எஸ்.ஒய். 1.1 நாள் 21.11.07.

––––

**ஆணை**

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருவண்ணாமலை, இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் / திட்ட அலுவலரின் பயன்பாட்டில் இருந்த அம்பாசிடர் சீருந்து எண்.டி.என்.25ஜி–0121ஐ கழிவு நீக்கம் செய்து ஒரு புதிய அம்பாசிடர் சீருந்து வாங்குவதற்கு அரசின் அனுமதியை கோரியுள்ளார்.

2. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளுக்கு புதிய வாகனங்கள் வாங்குவது குறித்து மத்திய அரசின் ஊரக வளர்ச்சித் துறை கடித எண். ஆர்–20015/32/2004–மாஊவமு, நாள் 03.01.2005–ல் கீழ்க்காணும் நிபந்தனைகளை விதித்துள்ளது:–

1. ஊரக வளர்ச்சி முகமைகள் புதிய வாகனங்களை வாங்குவதற்கு ஆகும் செலவு சில்லரைச் செலவு நிதிக்காக ஒதுக்கீடு செய்யப்படும் 30% விழுக்காடு என்ற உச்சவரம்பிற்குள் இருக்க வேண்டும். இதற்கு 30% விழுக்காடு ஊதிய செலவு நிதிக்கு மேல் செலவு ஏற்படும் இனங்களில் மாநில அரசே செலவினை ஏற்றுக்கொள்ள வேண்டும்.
2. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் நிர்வாகக்குழு பழைய வாகனத்தைக் கழிவு செய்து (condemnation of vehicle) புதிய வாகனம் வாங்குவதற்குரிய தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்புதல் வேண்டும்.
3. பழைய வாகனத்தை கழிவு செய்ய மாநில மோட்டார் வாகன மற்றும் பராமரிப்புத் துறை இயக்குநரின் சான்றிதழ் (certificate of condemnation of old vehicle ) பெறப்படவேண்டும்.

3. ஊரகவளர்ச்சி இயக்குநர் தனது செயற்குறிப்பில் புதிய வாகனம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் 30% வரை செலவின நிதியிலிருந்து வாங்கப்படும் என்றும்; புதிய வாகனம் வாங்குவதற்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் நிர்வாகக்குழு ( Governing Body ) தனது ஒப்புதலை அளித்துள்ளது என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். மேலும் 10.01.2008– நாளிட்ட அரசாணை (டி) எண்.– 24 –ல் பழைய அம்பாசிடர் சீருந்து எண். டி.என். 25ஜி–0121ஐ கழிவு நீக்கம் செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

4. இச்செயற்குறிப்பை கவனத்துடன் ஆய்வு செய்த அரசு திருவண்ணாமலை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூடுதல் ஆட்சியர் / திட்ட அலுவலரின் பயன்பாட்டிற்கு அரசாணை(நிலை) எண். 1229, உள்துறை நாள் 21.12.06–ல் வெளியிடப்பட்ட ஆணையில் அரசு ஒப்புதல் அளித்துள்ள பட்டியலில் கண்டுள்ள தயாரிப்பில் உ.ள்ள புதிய சீருந்து வாங்குவதற்கு அனுமதி அளித்து ஆணையிடுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி //

**க. அஷோக் வர்தன் ஷெட்டி,**
அரசு செயலாளர்.